# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 3/2022 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **திரு. திவாகர்** |
| Father's Name | : | **தங்கச்சாமி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.10.2025

**<u>முதல் விசாரணை:</u>**

**1. நான் தற்போது கலியாந்துார் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் எலக்ட்ரானிக்ஸ் சர்வீஸ் இன்ஞ்னியராக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு வழக்கின் புகார்தாரர் அ.சா.1 தினேஸ்வரன், காயம்பட்ட சாட்சி அ.சா.2 சேங்கைசாமி ஆகியோரை எனக்கு தெரியும். வழக்கின் ஆஜர் எதிரி முத்துக்குமார் என்பவரை தெரியும். அ.சா.3 மலைராஜா, சாட்சிகள் அபினாஷ்குமார், அஜித் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 17.02.2021ம் தேதி காலை 7.15 மணியளவில் நானும் அ.சா.2 சேங்கைசாமி என்பவரும் கலியாந்துாரில் உள்ள எங்கள் ஊரணிக்கரையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி முத்துக்குமார் என்பவர் எதிர்பாராத வகையில் மேற்கிலிருந்து வந்து சேங்கைசாமி**

என்பவரை அருவாளால் சரமாரியாக வெட்ட ஆரம்பித்துவிட்டார்.

2. எதிரி முத்துக்குமார் சேங்கை சாமியை பார்த்து உன்னால் தான் ஊரில் தலையை காட்ட முடியவில்லை என்று சொல்லி அருவாளால் சேங்கைசாமியின் தாடை, வலது புஜம், இடது கன்னம் ஆகிய இடங்களில் வெட்டினார். காயங்களினால் அவருக்கு அதிகமாக ரத்தம் வந்தது. நான் உடனே அவரது மகன் தினேஷ்வரன் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். அதன்பிறகு மலைராஜன் என்பவர் வந்து எதிரியை விலக்கிவிட்டார். அதன்பிறகு நாங்கள் அந்த வழியாக வந்த போக்கு ஆட்டோவில் காயம்பட்ட சேங்கைசாமியை ஏற்றி மருத்துவனைக்கு அனுப்பி வைத்தோம்.

3. எதிரியின் அம்மாவுடன் அ.சா.2 சேங்கைசாமி தவறான பழக்கத்தில் இருந்ததால் தான் சம்பவத்தில் எதிரி அ.சா.2 சேங்கைசாமியை தாக்கி காயப்படுத்தினார். இச்சம்பவம் என்னுடன் இருந்த அபினாஷ்குமார், அஜித்குமார், ஆதி நாராயணன் ஆகியோருக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.10.16 12:31:17 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்**

**சிவகங்கை.**